செய்தி வெளியீடு எண்:337 நாள்: 27.06.2021

# செய்தி வெளியீடு

**சுற்றுச் சூழலைக் காக்க அறவழிப் போராட்டங்களில் ஈடுபட்டவர்கள் மீதான வழக்குகள் திரும்பப் பெறப்படும் என்று அறிவித்ததற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களைப் பூவுலகின் நண்பர்கள் அமைப்பினர் சந்தித்து நன்றி தெரிவித்தார்கள்.**

- - - -

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களை முகாம் அலுவலகத்தில் இன்று (27.6.2021) பூவுலகின் நண்பர்கள் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் திரு. சுந்தர்ராஜன் மற்றும் அவ்வமைப்பின் நிர்வாகிகள் சந்தித்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் சுற்றுச் சூழலைக் காக்க அறவழிப் போராட்டங்களில் ஈடுபட்டவர்கள் மீதான வழக்குகள் திரும்பப் பெறப்படும் என்று சட்டப்பேரவையில் அறிவித்ததற்காக நன்றியினைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

மேலும், தேனி நியூட்ரினோ, தூத்துக்குடி ஸ்டெர்லைட், காவிரி டெல்டாவில் ஹைட்ரோ கார்பன், கூடங்குளம் அ ணு உலை, சென்னை - சேலம் எட்டு வழிச்சாலை, குடியுரிமைச் சட்டம் ஆகியவற்றை எதிர்த்து அறவழிப் போராட்டங்களில் ஈடுபட்டவர்கள் மீதான வழக்குகள் திரும்பப் பெறப்படும் என்று தெரிவித்ததற்கும், அண்மையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் மாண்புமிகு பிரதமர் அவர்களைச் சந்தித்து, சென்னை - சேலம் எட்டு வழிச்சாலைத் திட்டம், நியூட்ரினோ திட்டம், ஹைட்ரோ கார்பன் திட்டம் ஆகிய திட்டங்களை ஒன்றிய அரசு கைவிட வேண்டும் என்று வலியுறுத்தியதற்கும் நன்றி தெரிவித்தார்கள்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை - 9